# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.152/2018

பிரதிவாதிகள் தரப்பு 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.ரம்யா, கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சின்னத்தம்பி பி.வா.சா.–1 | | |
| த/பெ. | பெரியகருப்பன் | | |
| கிராமம் | குறிஞ்சாங்குளம் | தொழில் | கூலி |
| தாலுகா | அருப்புக்கோட்டை | வயது | 52 |

---

முதல் விசாரணை 23–06–2026.

நான் இந்த வழக்கின் 9ம் பிரதிவாதி. வழக்கின் விவரங்கள் எனக்கு நன்குதெரியும். 1,3,5,10 முதல் 12ம் பிரதிவாதிகள் எங்கள் வீட்டிற்கு அருகே வசிக்கும் நபர்கள். 13ம் பிரதிவாதி நாங்கள் குடியிருக்கும் வீட்டினை கிரையம் கொடுத்த சக்கரையின் மகன் ஆவார். அவர்களுக்கும் சேர்த்து நான் இந்த நிரூபணவாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கறிஞர் படித்துக்காண்பித்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணங்களை பிரதிவாதிகள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

(1) 15.06.2007ம் தேதிய சின்னச்சாமிக்கு சக்கரை எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் இணையதள நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(2) 18.06.2007ம் தேதிய ராமசாமிக்கு சக்கரை எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் இணைதயள நகல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(3) 18.06.2007ம் தேதிய வெள்ளைப்பாண்டிக்கு சக்கரை எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் இணைதயள நகல் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(4) 18.06.2007ம் தேதிய சின்னக்கண்ணனுக்கு சக்கரை எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் இணைதயள நகல் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(5) 18.06.2007ம் தேதிய மங்கையனுக்கு சக்கரை எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் இணைதயள நகல் பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(6) 04.07.2007ம் தேதிய சின்னத்தம்பிக்கு சக்கரை எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் இணைதயள நகல் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(7) 07.02.2008ம் தேதிய அழகம்மாளுக்கு சக்கரை எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் இணைதயள நகல் பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(8) 04.07.2007ம் தேதிய ராமனுக்கு சக்கரை எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் இணைதயள நகல் பி.வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(9) புல எண்.24க்குரிய வரைபடம் நகல் பி.வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(10) எனது வீட்டின் மின்கட்டணரசீது அசல் பி.வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(11) 20.02.2016ம் தேதிய 12ம் பிரதிவாதி பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது அசல் பி.வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

ANANTHAVALLI S
Digitally signed by ANANTHAVALLI S

(12) 9ம் பிரதிவாதியின் மின்கட்டண ரசீது அசல் பி.வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதிகளின் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது.

வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S